2010 மே 13]

(எ) மத்திய அரசின் உத்தரவிற்கிணங்க விவசாயிகளிடமிருந்து தேங்காயைக் கூடுதல் விலைக்குக் கொள்முதல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.*

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய 4 மாநிலங்களில்தான் தென்னை விவசாயம் நடைபெறுகின்றது. குறிப்பாக கோவை மாவட்டம், பொள்ளாச்சி, ஈரோடு மாவட்டம், நாகர்கோவில், பட்டுக்கோட்டை, பேராவூரணி, அதிராம்பட்டினம், ஒரத்தநாடு, தருமபுரி மாவட்டம், அரசம்பட்டி, குடியாத்தம், திருப்பத்தூர், அய்யம்பாளையம், வத்தலகுண்டு, தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு, மேலூர், ராஜபாளையம், தென்காசி, நெல்லை மாவட்டத்தில் உடன்குடி ஆகிய பகுதிகளில் தேங்காய் விவசாயம் பெருமளவில் நடைபெறுகின்றது. இவற்றையெல்லாம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொப்பரைத் தேங்காய் என்று சொல்லிவிட்டுப் போங்கள். எல்லா ஊர்களிலும் தேங்காய் விளைகிறது என்பது தெரியும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: *இவையல்லாமல் மற்ற பகுதிகளிலும் தேங்காய் விவசாயம் பரவலாக நடைபெறுகின்றது. குறிப்பாக கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டாரப் பகுதிகளில் கேரள மாநிலத்தில் எவ்வளவு தேங்காய் விளைகிறதோ, அதே அளவிற்கு தேங்காய் விளைகிறது. ஆனால், தேங்காய் 1972 ஆம் ஆண்டு என்ன விலைக்கு விற்றதோ, அதைவிட குறைந்த விலைக்கு தற்போது சென்றுவிட்டது. ஆகவே, "NAFED" நிறுவனம்மூலம் தமிழக 'TANFED' நிறுவனம் தேங்காயை ரூ.12/–க்கு கொள்முதல் செய்யலாம் என்கிற உத்தரவை மத்திய அரசு போட்டு 1½ மாதங்களாகிறது. எனவே, தமிழக அரசு, மத்திய அரசின் வழிகாட்டும் நெறிமுறைப்படி தேங்காயாக கொள்முதல் செய்ய வேண்டும். கொப்பரைத் தேங்காயை உற்பத்திச் செய்கிற திறமை விவசாயிகளிடத்திலே இல்லை. கொப்பரைத் தேங்காயை உற்பத்திச் செய்வதற்கான வாய்ப்புகளும் விவசாயிகளிடத்தில் இல்லாத ஒரு சூழ்நிலையில், கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மாநில அரசு தேங்காயைக் கொள்முதல்*

செய்து தனியாருக்குச் சொந்தமான 1,500 உலர் களங்கள் மூலமாக தேங்காயைக் கொப்பரையாக மாற்றி, தேங்காய் எண்ணெய்யாக மாற்றி, அதனை தமிழகத்தினுடைய நியாய விலைக் கடைகளிலே, ஊட்டி டீயை எப்படி வழங்குகிறோமோ அதைப்போல பொள்ளாச்சியின் நல்ல தரமான தேங்காய் எண்ணெய்யை தமிழகம் முழுவதும் இருக்கிற நியாய விலைக் கடைகளிலே வழங்க வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை வைக்கிறேன். ரூ.12/–க்கு ஒரு கிலோ தேங்காயைக் கொள்முதல் செய்து, விவசாயிகளுடைய வேதனையைப் போக்க வேண்டுமென்று பணிவன்போடு இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அதற்கான வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்களும் இதுகுறித்து என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். திரு. என்.ஆர். ரெங்கராஜன், சொல்லுங்கள். இரண்டே வார்த்தைகளில் முடியுங்கள். அவர் சொன்னதுதானே?

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பிரச்சினை. தேங்காயைப் பொறுத்தவரையில், 1980–களிலே என்ன விலை கிடைத்ததோ, அதே விலைதான் இன்றைக்கும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. தென்னை விவசாயிகள் மிக, மிக வருத்தமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். மதிப்புமிக்க தலைவர் கலைஞர் அவர்கள், கரும்பு விவசாயிகளுக்கெல்லாம் நல்ல முறையிலே விலையை உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். நெல்லுக்கு குவிண்டாலுக்கு விலையை உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். அதேபோன்று, தென்னை விவசாயிகளின்மீதும் கருணை வைத்து, தேங்காயை கேரளாவில் கொள்முதல் செய்வதைப்போல, தமிழகத்திலும் நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும். அதேபோன்று, கிலோ 44 ரூபாய் 50 பைசாவிற்கு இன்றைக்கு கொப்பரையை கொள்முதல் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதை ரூ.70/–க்கு கொள்முதல் செய்வதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

2010 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விவசாயிகள் பெரும்பாலும் கோவை மற்றும் பல மாவட்டங்களிலெல்லாம் தென்னையை வளர்த்து, தேங்காய் உற்பத்தி செய்வது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் மற்றும் திரு. என்.ஆர். ரெங்கராஜன் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, இதுவரை தமிழக அரசின் சார்பில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் எப்பொழுதும் செய்வதில்லை. தேங்காயாகவும் அரசின் சார்பில் கொள்முதல் செய்வதில்லை. கொப்பரைத் தேங்காய் ஒரு கிலோ என்ன விலை என்று மத்திய அரசாங்கம் நிர்ணயம் செய்து அதை வாங்குவதற்கு* "NAFED" *மூலம் உத்தரவிட்டு அவர்கள் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கொள்முதல் செய்ய, அந்த விலைக்கு அனுமதி வழங்குவார்கள். அந்த அடிப்படையிலேதான், கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது.*

முற்பகல் 10–25

ஆகவே, கொப்பரைத் தேங்காய் கிலோவுக்கு இப்பொழுது இருக்கின்ற விலையைவிட கூடுதலாகத் தரவேண்டுமென்று இந்த மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கின்றோம். அந்த அனுமதி கிடைத்தால் அந்த விலையில் 'NAFED' *மூலம் கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்றவற்றையெல்லாம் நாளைக்குப் பார்ப்போம். இன்றைக்கு நேரம் இல்லை.*

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில*